## சின்ன சின்னதாய்

### 63 குடியிருப்புகளில் குடிநீர் இணைப்பு துண்டிப்பு காங்கயம் நகர் மன்ற கூட்டத்தில் தகவல்

■ காங்கயம்

காங்கயம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத 63 குடியிருப்புகளில் குடிநீர் இணைப்பை துண்டித்து நடவடிக்கை மேற்கொண்டதாக நகராட்சி கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காங்கயம் நகர் மன்ற சாதாரண கூட்டம் நகராட்சி அலுவலகக் கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. நகர் மன்றத் தலைவர் ந.சூரியபிரகாஷ் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையாளர் ஜி.பால்ராஜ், நகர் மன்ற துணைத் தலைவர் கமலவேணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் காங்கயம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத குடியிருப்புகளுக்கு பலமுறை கட்டணம் செலுத்துமாறு நகராட்சி நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், குடிநீர் கட்டணம் செலுத்தாத 63 குடியிருப்புகளில் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த கூட்டத்தில் காங்கயம் நகர் மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலக ஊழியர்கள் பங்கேற்றனர்.

### பூலுவப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் பாரம்பரிய உணவு திருவிழா

■ திருப்பூர்

திருப்பூர் பூலுவப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நேற்று பாரம்பரிய உணவுத் திருவிழா நடந்தது. சிறப்பு விருந்தினராக உணவு பாதுகாப்பு அலுவலர் விஜயலலிதாம்பிகை கலந்துகொண்டார். சுமார் 100–க்கும் மேற்பட்ட உணவு வகைகளை தங்களது பெற்றோரின் உதவியோடு மாணவ, மாணவிகள் தயார் செய்து கொண்டு வந்திருந்தனர். மேலும் சிறுதானிய உணவுகள், அடுப்பு, எண்ணெய் இல்லாமல் சமையல்,கூழ் என 11–க்கும் மேற்பட்ட குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன.

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான உணவுகளை பெற்றோர் மற்றும் மாணவ, மாணவிகள் சாப்பிட்டு மகிழ்ந்தனர். ஆண்டுதோறும் உணவுத்திருவிழா நடத்தப்படும் என பள்ளித் தலைமை ஆசிரியர் ஆரோக்கிய ஜாஸ்மின் மாலா தெரிவித்தார்.

● திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்வுக்கு ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமை வகித்து, கேக் வெட்டினார். படம்: இரா.கார்த்திகேயன்

### தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் முறைகேடு புகார் தொடர்பாக விசாரணை

■ திருப்பூர்

அலகுமலை ஊராட்சியில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத்திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாக பொங்கலூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு புகார்கள் சென்றன. அதில், தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில் பணியாற்றாத பலருக்கு மோசடியாக கணக்கு காண்பித்ததாக சிலர் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து அலகுமலை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்ட திருப்பூர் மாவட்ட குறைதீர் அலுவலர் தலைமையில் நேற்று விசாரணை நடந்தது. இத்திட்டத்தில் பொறுப்பாளராக இருந்த நபர், தனதுஉறவினர்களுக்கு வேலை வாங்கித் தந்தாரா? குடும்ப உறுப்பினர் பெயரில் அட்டை பெற்றாரா? என விசாரிக்கப்பட்டது. விசாரணை அறிக்கை அடிப்படையில், அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகை

■ பல்லடம்

பொங்கலூர் அருகே மாதப்பூர்ஊராட்சி சிங்கனூரில் அத்திக்கடவு குடிநீர் கடந்த 15 நாட்களாக விநியோகிக்கப் படவில்லை எனக்கூறி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை காலிக்குடங்களுடன் நேற்று மக்கள் முற்றுகையிட்டனர்.

இதுதொடர்பாக அவர்கள் கூறும்போது, "எங்கள் பகுதியில்அத்திக்கடவு குடிநீர், கடந்த 15நாட்களாக விநியோகிக் கப்படவில்லை. இதனால் அத்தியாவசிய தேவைக்குக் கூடதண்ணீர் இல்லாமல் அவதியடைந்து வருகிறோம். இதுதொடர்பாக பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தநடவடிக்கையும் எடுக்க வில்லை.சீரானஇடைவெளி யில்குடிநீர் விநியோகம்செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்" என்றனர்.

இதையடுத்து பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி, சீரான இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்யப் படும் என உறுதி அளித்ததால், மக்கள் கலைந்து சென்றனர்.

## நகை வியாபாரியிடம் ரூ.1.10 கோடி கொள்ளை வழக்கில்
# கார் ஓட்டுநர் உட்பட 5 பேர் கைது

■ பல்லடம்

கரூர் நகை வியாபாரியிடம் போலீஸார் எனக் கூறி ரூ.1.10 கோடி கொள்ளையடித்த சம்பவத்தில், வியாபாரியின் கார் ஓட்டுநர் உட்பட 5 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கரூர் கீழநஞ்சைய தெருவை சேர்ந்த நகை வியாபாரி வெங்கடேசன் (60) என்பவர் அவ்வப்போது கோவைக்கு சென்று நகைகளை வாங்கிச் செல்வது வழக்கம். கடந்த 4-ம் தேதி மாலை கோவைக்கு நகை வாங்க காரில் வந்துகொண்டிருந்தார். ஓட்டுநர் ஜோதிவேல் (60) என்பவர் காரை ஓட்டினார். திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே சம்பந்தம்பாளையத்தில், இவர்கள் வந்த காரை வழிமறித்து மற்றொரு கார் நின்றது. அதிலிருந்து 4 பேர் இறங்கினர். தங்களை போலீஸார் எனக்கூறி வெங்கடேசனை மிரட்டி ரூ.1 கோடியே 10 லட்சத்தை பறித்துக்கொண்டு தப்பினர். புகார் தொடர்பாக அவிநாசிபாளையம் போலீஸார் வழக்கு பதிந்து, 5 பேரை கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பாக போலீஸார் கூறியதாவது:

கோவையில் நகை வாங்க வெங்கடேசனுடன் காரில் சென்று கொண்டிருப்பதாக, தனது நண்பர் தியாகராஜன் (41) என்பவருக்கு ஓட்டுநர் ஜோதிவேலு தெரிவித்ததும் கூட்டாக இணைந்து அவர்கள் பணம் பறிக்க திட்டம் தீட்டியதும் விசாரணையில் தெரியவந்தது.

இதில் மொத்தமாக 8 பேர் சம்பந்தப்பட்டுள்ளனர். இவ்வழக்கு தொடர்பாக ஜோதிவேல், தியாகராஜன் ஆகியோரை போலீஸார் கைது செய்து, கொள்ளைபோன பணத்தில் ரூ.53 ஆயிரத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

கைதான இருவரும் அளித்த தகவல்படி, கரூர் குளித்தலையை சேர்ந்த விக்னேஷ் (30), ஸ்ரீகாந்த் (28) மற்றும் 17 வயது சிறுவன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கொள்ளை சம்பவத்துக்கு பயன்படுத்திய கார் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

இந்த வழக்கில் மேலும் 3 பேரை தேடி வருகிறோம். வெங்கடேசனிடம் கடந்த 4 ஆண்டுகளாக ஜோதிவேல் ஓட்டுநராக பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# உடுமலை உழவர் சந்தையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

■ உடுமலை

உடுமலையில் உள்ள உழவர் சந்தையில் 100-க்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து, தங்களுக்கு தேவையான காய்கறிகள், பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில், உழவர் சந்தையில் வியாபாரிகளின் ஆதிக்கம் அதிகரித்து விட்டதாகக்கூறி விவசாயிகள் திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் உழவர் சந்தை அலுவலர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, விவசாயிகளை சமாதானப் படுத்தினர். போராட்டத்தை கைவிட்டுஅனைவரும் கலைந்து சென்றனர்.

இதுதொடர்பாக விவசாயிகள் கூறும்போது, "விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை விற்பனை செய்யவே உழவர் சந்தை ஏற்படுத்தப்பட்டது. காலப்போக்கில் போலி ஆவணங்கள் அல்லது வேறு நபர்களின் ஆவணங்கள் மூலம் வியாபாரிகளே உழவர் சந்தையை ஆக்கிரமித்து விற்பனை செய்யும் போக்குஅதிகரித்துள்ளது. அவ்வப்போது இதனை கண்டித்து நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவதும், அதிகாரிகள் சமாதானம் பேசுவதும் தொடர்ந்து வருகிறது. உழவர் சந்தையை ஆக்கிரமித்துள்ள வியாபாரிகளை வெளியேற்ற வேண்டும்" என்றனர்.

● உடுமலை உழவர் சந்தையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்.

இதுகுறித்து உதவி வேளாண் அலுவலர் சித்ரா கூறும்போது, "உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஒன்று போலியான ஆவணங்கள் மூலம் கடை நடத்துவதாக விவசாயிகள் தெரிவித்தனர். அதுகுறித்து துறைஅதிகாரிகள் மூலம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

### காலி பாட்டில் சேகரிக்கும் தொழிலாளி கொலை வழக்கில் இளைஞர் கைது

■ உடுமலை

உடுமலையை அடுத்த சின்னப்புதூர் பகுதியைச் சேர்ந்தவர் ஆறுச்சாமி (55). கூலித் தொழிலாளி. சாலையோரம் கிடக்கும் பாட்டில்களை சேகரித்து விற்பனை செய்து வந்தார். கரட்டுமடம் பகுதியில் பாட்டில்களை சாக்குப்பையில் சேகரித்துக் கொண்டிருந்தார். அப்போது எதிரே மயிலாபுரம் கிராமத்தை சேர்ந்த சண்முகசுந்தரம் (28) என்பவர் நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் மீது ஆறுச்சாமி மோதியதாக கூறப்படுகிறது.

ஆத்திரமடைந்த சண்முகசுந்தரம் கல்லால் தாக்கியதில் ஆறுச்சாமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவலின் பேரில் தளி போலீஸார் சென்று, சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சண்முகசுந்தரத்தை கைது செய்து தளி போலீஸார் விசாரிக்கின்றனர்.

### ஓணாப்பாளையத்தில் மீண்டும் ஆடுகளை தேடி வந்த சிறுத்தையால் மக்கள் அச்சம்

■ கோவை

கோவையை அடுத்த ஓணாப்பாளையம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு தோட்டத்தில் புகுந்த சிறுத்தை, அங்கு கட்டப்பட்டிருந்த நான்கு ஆடுகளை கொன்று ஓர் ஆட்டை கவ்விச் சென்றது.

இது தொடர்பான சிசிடிவி காட்சி வைரலானது. மேலும், சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு ஆடுகளை கவ்விச் சென்ற சிறுத்தை அதே தோட்டத்திற்கு ஆடுகளை தேடி சென்றது அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள், விவசாயிகள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர்.


## ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்

### பொது இ-ஏல அறிவிப்பு - அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகளாகிய சொத்துகளின் விவரம்

இதனால் குறிப்பாக இவ்வங்கியில் கடன் பெற்ற கடன்தாரர்களுக்கும், பொதுவாக பொதுமக்களுக்கும் தெரிவிப்பது என்னவெனில் கிழே குறிப்பிட்டுள்ள ஆக்ஸிஸ் வங்கிக் கிளையில் அடமானம் வைக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள கணக்குகளில் உள்ள தங்க நகைகள் கீழ்கண்ட கிளைகளில் வைத்து பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளோம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்டில் தமது தங்க ஆபரணங்களை வங்கியிடம் அடமானம் வைத்து கீழ் குறிப்பிட்டவாறு கடன் வசதி பெற்றுள்ளனர். கடன்தாரர், உத்தரவாதமளித்தவர்களிடம், அவர்கள் பெற்ற தங்கக் கடன் வசதியின் கீழ் நிலுவையிலுள்ள தொகையை திரும்பச் செலுத்தக் கோரி கடன்தாரர்கள்/ உத்தரவாதமளித்தவர்களுக்கு கேட்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. ஆனால் கடன்தாரர்கள் / உத்தரவாதமளித்தவர்கள் நிலுவையிலுள்ள கடன்தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் வங்கி வேறுவழியின்றி நிர்ப்பந்த நிலையில் அடமானம் வைத்துள்ள தங்க நகைகளை இ–ஏலம் மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. அதிலும் குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ள தங்க நகை இனங்களை **18.03.2025 ; செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணியளவில் "எங்குள்ளதோ அங்கு", "என்ன உள்ளதோ அது", "உள்ளது உள்ளவாறு", "மீளப் பெற இயலாது"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது.

கடனாளிகளின் விபரமும், நிலுவைத் தொகையும்.

| வ. எண். | கிளையின் பெயர் | கடன்தாரர்களின் பெயர் | கடன் கணக்கு எண் | நிலுவைத் தொகை ரூ. | கேட்பு அறிவிப்புத் தேதி | மொத்த எடை கிராமில் | நிகர எடை கிராமில் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அவிநாசி [TN] | M புவனேஸ்வரி | xxxxxxxxxxx322774 | 155700 | 28-11-2024 | 40.9 | 40 |
| 2 | அவிநாசி [TN] | M புவனேஸ்வரி | xxxxxxxxxxx565103 | 32000 | 28-11-2024 | 8.3 | 8.2 |
| 3 | குன்னூர் [TN] | இம்மானுவேல் ஜோசப் சண்முகம் | xxxxxxxxxxx446715 | 43524 | 30-01-2025 | 8 | 7.9 |
| 4 | கவுலி பிரவுன் ரோடு [TN] | R பிரவீன்குமார் | xxxxxxxxxxx781024 | 123138 | 30-01-2025 | 27.8 | 27.1 |
| 5 | காந்திபுரம், கோயமுத்தூர் [TN] | ஸ்ரீசத் திலிப் கோரக்ஷநாத் | xxxxxxxxxxx936195 | 139811 | 30-01-2025 | 28 | 27.7 |
| 6 | காந்திபுரம், கோயமுத்தூர் [TN] | ஸ்ரீசத் திலிப் கோரக்ஷநாத் | xxxxxxxxxxx933235 | 129929 | 30-01-2025 | 26.6 | 25.9 |
| 7 | காந்திபுரம், கோயமுத்தூர் [TN] | ஸ்ரீசத் திலிப் கோரக்ஷநாத் | xxxxxxxxxxx866216 | 84315 | 30-01-2025 | 18.2 | 18.1 |
| 8 | காளப்பட்டி, கோயமுத்தூர் [TN] | சிந்து. C | xxxxxxxxxxx642788 | 553927.4 | 09-01-2025 | 133.6 | 125.4 |
| 9 | பீளமேடு, கோயமுத்தூர் [TN] | N.பாலாஜி | xxxxxxxxxxx135643 | 613661 | 13-12-2024 | 128.2 | 121.2 |
| 10 | வெள்ளக்கோயில் [TN] | கிருஷ்ணமூர்த்தி. N | xxxxxxxxxxx292127 | 478088 | 09-01-2025 | 94.7 | 93.5 |

ஆக்ஸிஸ் வங்கியானது ஒரு கணக்கை ஏலத்திலிருந்து விலக்கவோ/ஏல தேதியை எவ்வித முன் அறிவிப்பு இன்றி மாற்றவோ அதிகாரம் கொண்டுள்ளது. ஏலம் ஆன்லைனில் **https://gold.samil.in** (ஆன் லைன் விற்பனையாளரின் இணையதளம்) ததில் **18.03.2025, செவ்வாய்கிழமை அன்று, பிற்பகல் 12.30 லிருந்து பிற்பகல் 3.30 மணியளவில்** நடைபெறும்.

ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இணையதளத்தை (**https://gold.samil.in** ஆன் லைன் விற்பனையாளரின் இணையதளம்) லாக் ஆன் செய்யவும்.

இடம் : தமிழ்நாடு

ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்
அதிகாரபூர்வ அதிகாரி



## ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

### மின்-ஏலம் அறிவிப்பு

**2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.**

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | கடன் கணக்கு எண். | உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் | 13-2 அறிவிப்பு நாள் | சுவாதீன நாள் | 06.03.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை | சொத்தினை பார்வையிடும் நான் & நேரம் | ரிசர்வ் தொகை INR-ல் | முன்வைப்பு தொகை (EMD) INR-ல் | மின்-ஏலம் நாள் மற்றும் நேரம் | ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 45989420002709 45989420001808 & 45989410001070 | 1) திரு. சரவணன் R, 2) திருமதி. மாரியம்மாள் சரவணன் | 04.09.2024 | 16.11.2024 | ரூ.13,83,059.00 (ரூபாய் பதிமூன்று இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து ஐம்பத்தி ஒன்பது மட்டும்) | 26.03.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை | ரூ.10,18,700/- (ரூபாய் பத்து இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூறு மட்டும்) | ரூ.1,01,900/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) | 09.04.2025 @ 03.00 PM | 08.04.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009. |
| | | **பாதுகாப்பு சொத்தின் விவரம் :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கிணத்துகடவு சார் பதிவு மாவட்டம், மதுக்கரை தாலுகா, மயிலேரிபாளையம் கிராமம், பட்டா எண்.114, 85, எஸ்.எப்.எண். 22/1 தற்போது துணை பிரிவு எஸ்.எப். எண்.22/1பி புஞ்சை ஏக்கர் 1.00 மற்றும் எஸ்.எப். எண்.23 புஞ்சை ஏக்கர் 3.69 மொத்த புஞ்சை ஏக்கர் 4.69 நிலம் "ராயல் அவென்யூ பேஸ் 1 மற்றும் பேஸ் 2" என்ற பெயரில் லேஅவுட்டாக மாற்றப்பட்டது மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டமிடல் ஆணையத்தின்கீழ் Ma.Va (Ko.Vu.Thi.Ku) No.99/ 2019 (Phase II) முறைப்படுத்தப்பட்ட ஒப்புதல் லேஅவுட், சைட் எண்.21 மற்றும் பின்வரும் **எல்லைகள் மற்றும் அளவுகள் : கிழக்கு :** சைட் எண்.20, **மேற்கு :** சைட் எண்.22, **வடக்கு :** ஒதுக்கப்பட்ட சைட், **தெற்கு :** கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை. இதன் மத்திய கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் : 25 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் : 17.6 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் : 35.3 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் : 43 அடி. | | | | | | | | |
| 2 | 33719630000050 | 1) திரு. குமார் M, 2) திருமதி. சின்னகண்ணாள் M | 08.09.2022 | 19.12.2024 | ரூ.8,21,257.40 (ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து இருநூற்றி ஐம்பத்தி ஏழு மற்றும் பைசா நாற்பது மட்டும்) | 26.03.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை | ரூ.5,27,900/- (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) | ரூ.52,800/- (ரூபாய் ஐம்பத்தி இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) | 09.04.2025 @ 03.00 PM | 08.04.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009. |
| | | **பாதுகாப்பு சொத்தின் விவரம் :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் SRO, பல்லடம் தாலுகா, மோப்பிரிபாளையம் கிராமம், நத்தம் சர்வே எண். 241/2சி வருவாய் பதிவின்படி எஸ்.எப்.எண். 241/2சி, மொத்த பரப்பு 510 சதுர அடி. **510 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்தின் எல்லைகள் : வடக்கு :** திரு. ரங்கம் அவர்களின் வீடு நத்தம், **தெற்கு :** திரு. சுப்பன் அவர்களின் வீடு, **கிழக்கு :** சாலை, **மேற்கு :** எனக்கு சொந்தமான வீடு. அளவுகள் விவரம் : வடக்கு : கிழக்கு மேற்கு 25.50 அடி, கிழக்கு : தெற்கு வடக்கு 20 அடி, தெற்கு : கிழக்கு மேற்கு 25.50 அடி, மேற்கு : தெற்கு வடக்கு 20 அடி. மொத்த பரப்பளவு 510 சதுர அடி மற்றும் அனைத்து அடிப்படை உரிமைகள் மற்றும் பாதை. | | | | | | | | |
| 3 | 33719420000296 | 1) திரு. பாபுமுருகன், 2) திருமதி. தங்கசெல்விp | 11.11.2024 | 11.01.2025 | ரூ.29,46,872.30 (ரூபாய் இருபத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி இரண்டு மற்றும் பைசா முப்பது மட்டும்) | 26.03.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை | ரூ.29,73,800/- (ரூபாய் இருபத்தி ஒன்பது இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து எண்ணூறு மட்டும்) | ரூ.2,97,400/- (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்றி ஏழாயிரத்து நானூறு மட்டும்) | 09.04.2025 @ 03.00 PM | 08.04.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009. |
| | | **பாதுகாப்பு சொத்தின் விவரம் :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சிங்கநல்லூர் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, உப்பிலிபாளையம் கிராமம், நத்தம் எஸ்.எப்.எண். 94/1B, 94/2 B நிலம் லேஅவுட்டாக மாற்றப்பட்டது இதில் சைட் எண். 21 பகுதி மற்றும் பின்வரும் **எல்லைகள் மற்றும் அளவுகள்: அயிட்டம் எண்.1 : ஆவணம் எண். 3793/2008: வடக்கு :** லேஅவுட் சாலை, **கிழக்கு :** சைட் எண்.22, **தெற்கு :** எங்களின் 3 பேருக்கு சொந்தமான சொத்து, **மேற்கு :** எங்கள் 3 பேருக்கு சொந்தமான சொத்து. இதன் மத்திய தெற்கு வடக்காக இருபக்கமும் : 10 அடி, கிழக்கு மேற்காக இருபக்கமும் : 16 அடி. பரப்பளவு 160 சதுர அடி அல்லது 14.8644 சதுர மீட்டர் பரப்பு காலி நிலம் மற்றும் சொத்தினை அடையும் சாலை உபயோக உரிமைகள் மற்றும் லேஅவுட் சாலைகள் பொது உபயோக மற்றும் பொது பாதை உரிமைகள் இதர. மேற்கூறப்பட்ட காலி நிலத்தில் எந்த கட்டிடமும் இல்லை. மேற்குறிப்பிட்ட சொத்து "பெரியார் நகர்"-ல் அமைந்துள்ளது. மேற்கூறப்பட்ட சொத்து வார்டு எண்.32, பிளாக் எண்.34, டி.எஸ்.எண்.103-க்குட்பட்டது. சொத்தானது கோயம்புத்தூர் சிட்டி கார்ப்பரேஷன் எல்லைகளுக்குட்பட்டது. **அயிட்டம் எண்.2 : ஆவணம் எண். 483/2012: மேற்கு :** சைட் எண்.20, **கிழக்கு :** எங்கள் ஏற்கனவே வெளியிட்ட பகுதி சொத்து மற்றும் சைட் எண்.22, **தெற்கு :** எஸ்.எப்.எண்.96, **வடக்கு :** கிழக்கு மேற்கு சாலை. இதன் மத்திய தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் : 40 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் : 20 அடி, அதிலிருந்து தெற்காக தெற்கு வடக்கு பக்கம் : 30 அடி, அதிலிருந்து கிழக்காக கிழக்கு மேற்கு பக்கம் : 16 அடி, அதிலிருந்து தெற்காக தெற்கு வடக்கு பக்கம் : 16 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் : 04 அடி. பரப்பளவு 640 சதுர அடி அல்லது 1 சென்ட் 204 சதுர அடி அல்லது 59.457 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் அதன் கதவுகள், ஜன்னல்கள், பொருத்துதல்கள், உதிரிபாகங்கள் மற்றும் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் வாகனங்கள் உபயோக லேஅவுட் சாலை உரிமைகள் மற்றும் அதனுடன் உள்ள மற்ற அனைத்து பாகங்கள். கதவு எண்.21, சொத்து வரி அசெஸ்மெண்ட் எண். 18037, மின்சார இணைப்பு எண்.292. மேற்கூறப்பட்ட சொத்து வார்டு எண்.32, பிளாக் எண்.34, டி.எஸ்.எண். 103. சொத்தானது கோயம்புத்தூர் சிட்டி கார்ப்பரேஷன் எல்லைகளுக்குட்பட்டது. | | | | | | | | |

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலில் P, (மொபைல் எண். 9884474084), திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849) & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

**நாள் : 08.03.2025, இடம் : கோயம்புத்தூர்**

**Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**



## இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

HINDUJA HOUSING FINANCE

தலைமை அலுவலகம்: 167-169, 2 வது தளம், அண்ணா சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015.
கிளை அலுவலகம்: எண்.89, அன்சாரி தெரு, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

### கேட்பு அறிவிப்பு

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு**

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் பின்வரும் அறிவிப்பினை இதன் மூலம் வழங்குகிறோம். பின்வரும் நபர்களாகிய நீங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி கடன் வசதி பெற்றுள்ளீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். பெற்ற கடனுக்கு ஈடாக கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் உரிமை ஆவணங்களை இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-யிடம் வழங்கி அடமானமும் வைத்துள்ளீர்கள். கடன் வசதிகளை பெற்ற பிறகு ஒப்பந்த விதிகளை கடைபிடிக்காமல் அவற்றுக்கு மாறாக பெற்ற கடன் மற்றும் வட்டி, இதர செலவுகளை முறையாக திருப்பி செலுத்த தவறிவிட்டீர்கள், அதன் காரணமாக உங்கள் கடன் கணக்கு வாராக்கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் உங்கள் கடன் கணக்கில் உள்ள பாக்கி மற்றும் வட்டி இதர செலவுகளை சேர்த்து (கீழே விவரிக்கப்பட்டுள்ள) மொத்தமாக செலுத்துமாறு இதன் மூலம் மீண்டும் நிதி நிறுவனம் வலியுறுத்துகிறது. நிதி நிறுவனத்திற்கு சேர வேண்டிய கடன் பாக்கியை நீங்கள் செலுத்த தவறினால் SARFAESI சட்டம் பிரிவு 13 (4) கீழ் விவரிக்கப்பட்டுள்ள அனைத்து அல்லது ஏதேனும் ஒரு உரிமையை நிதி நிறுவனம் செயல்படுத்தும், மேலும் பொருந்துகின்ற சட்ட சரத்துக்கள் அந்த அவசியம் என நிதி நிறுவனம் கருதும் பட்சத்தில் மேற்குறித்த நடவடிக்கைகளையோ அல்லது சட்டப்படியான மேல் நடவடிக்கைகளையோ எடுப்பதற்கு வங்கியின் உரிமைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு செயல்படுகிறது.

**கிளை: கோயம்புத்தூர், கடன்தாரர்: திரு. சரவணன். R, இணை கடன்தாரர்: திருமதி. சந்திரபுஷ்பா மணிகண்டன். S, இருவரும் வசிப்பது எண். T.N.P நகர், வடமதுரை அஞ்சல், அப்பநாயக்கன்பாளையம், குரும்பாளையம், கிராமம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா-641017. கடன் கணக்கு எண்: TN/CBT/CMBT/A000000201, NPA தேதி: 06.02.2025, கேட்பு அறிவிப்பு தேதி: 24.02.2025, நிலுவைத் தொகை ரூ. 39,51,336/- அன்றுள்ளபடி: 24.02.2025.**

**அசையா சொத்துக்களின் விபரங்கள்:** கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் துணை பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, துடியலூர் கிராமம், S.F.No.240/2, Pu.Ac.3.39, Pu.Ac.2.84, L.B/R(C.B.N) எண்.343/1987 இன் படி, தள எண்.15, 2478 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், மேற்கு பகுதி 1380 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், பின்வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகளைக் கொண்ட நான்கு எல்லைகள்: வடக்கு: தள எண்.16, தெற்கு: 30 அடி அகலம் கொண்ட கிழக்கு முதல் மேற்கு சாலை, கிழக்கு: தள எண்.22, மேற்கு: மேலே உள்ள தள எண்.15 இல் மீதமுள்ள நிலம். அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 34 1/2அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 34 1/2அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 40 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 40 அடி, மொத்தம் 1380 சதுர அடி (128.21 சதுர மீட்டர்) அல்லது 03 சென்ட் காலியாக உள்ள நிலத்தின் 073 சதுர மீட்டர், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், துடியலூர் கிராமத்தில் அமைந்துள்ளது. அனைத்து வசதி உரிமைகள் மற்றும் பாதை அணுகலுடன், கதவு எண்.2A (TNP நகர் வார்டு எண், 17). மதிப்பீட்டு எண்.41128 EB .எண்.03-133-001-359. குடிநீர் இணைப்பு எண்.40403323. மேலே உள்ள சொத்து TNP நகரில் (வார்டு எண்.170) அமைந்துள்ளது. மேலே கூறப்பட்ட சொத்து இப்போது பட்டா (பட்டா எண்.5326) இன் படி புதிய S.F .எண்.240/2A1A இல் இணைக்கப்பட்டுள்ளது.

**கிளை: கோயம்புத்தூர், கடன்தாரர்: திரு. பாலாஜி. G, இணை கடன்தாரர்: திருமதி. ரேணுகா தேவி, இருவரும் வசிப்பது எண். T.N.P நகர், வடமதுரை அஞ்சல், அப்பநாயக்கன்பாளையம், குரும்பாளையம், கிராமம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா-641017. கடன் கணக்கு எண்: TN/CBT/CBTR/A000000719, NPA தேதி: 06.02.2025, கேட்பு அறிவிப்பு தேதி: 24.02.2025, நிலுவைத் தொகை ரூ. 36,66,252/- அன்றுள்ளபடி: 24.02.2025.**

**அசையா சொத்துக்களின் விபரங்கள்: வகை எண்.1:** திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணைப் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுகா, பல்லடம் பஞ்சாயத்து யூனியன், கரைப்புதூர் கிராமத்தின் எல்லைக்குள் கரைப்புதூர் கிராம பஞ்சாயத்து வாரியத்தின் எல்லைக்குள், S.F.No.469(பகுதி), S.F.no.470/1 பரப்பளவு கொண்ட 4.91 ஏக்கர் நிலம் தளவமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளது. இது கோயம்புத்தூர் மண்டல நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரகத்தின் Na.Ka.no.6538/2018,Co.Ma-3 தேதியிட்ட 06.02.2019 மற்றும் Ma.Va.)(Co.Ma)No.89/2019 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டு 'சுகுணா நகர்' தளவமைப்புகள் என பெயரிடப்பட்டது. இதில் தள எண்.55 இன் தெற்குப் பகுதியில் மேற்குப் பகுதியில் ஒரு பகுதி 540 சதுர அடி நிலம் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது:-நான்கு எல்லைகள்: வடக்கு: 23 அடி அகலம் கிழக்கிலிருந்து மேற்கு வரையிலான லேஅவுட் சாலை, தெற்கு: 585 சதுர அடி பரப்பளவு கொண்ட தள எண்.55 இன் வடக்குப் பகுதியில் மேற்குப் பக்கம், கிழக்கு: தள எண்.56, மேற்கு: கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலம். அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 18 3/4 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 17 1/4 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 30 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 30 அடி, இதற்காக 540 சதுர அடி நிலமும், S.F.no.469 (பகுதி S.F.no .470/1, S.F.No.470/4பு1 நிலங்களும் லேஅவுட்களாக மாற்றப்பட்டு "சுகுணா நகர்" லேஅவுட்கள் என்று பெயரிடப்பட்டுள்ளன. இதில், பக்க எண்.55 இன் தெற்குப் பகுதியில் கிழக்குப் பகுதியில் ஒரு பகுதி, 600 சதுர அடி நிலம் பின்வரும் எல்லைகள்: நான்கு எல்லைகள்: வடக்கு: 23 அடி அகலம் கிழக்கிலிருந்து மேற்கு வரையிலான லேஅவுட் சாலை, தெற்கு: 600 சதுர அடி பரப்பளவு கொண்ட தள எண்.55 இன் வடக்குப் பகுதியில் கிழக்குப் பக்கம், கிழக்கு: தள எண்.56, மேற்கு: 23 அடி அகலம் வடக்கிலிருந்து தெற்கு வரையிலான லேஅவுட் சாலை. அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 30 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 30 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 20 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 20 அடி, இந்த 600 சதுர அடி நிலத்திற்கு. **வகை எண்.2:**நிலத்தின் S.F.no .469 (பகுதி நிலத்தின் S.F.no.470/1, நிலத்தின் S.F.No.470/4A1 நிலங்கள் தளவமைப்புகளாக மாற்றப்பட்டு "சுகுணா நகர்" தளவமைப்புகள் என்று பெயரிடப்பட்டுள்ளன, இதில் பக்க எண்.55 இன் வடக்குப் பகுதியில் மேற்குப் பகுதி 37.5 சதுர அடி நிலத்தை அளவிடுகிறது, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது:-நான்கு எல்லைகள்: வடக்கு: 540 சதுர அடி நிலத்தை அளவிடும் தள எண்.55 இன் தெற்குப் பகுதியில் மேற்குப் பக்கம், தெற்கு: 548 சதுர அடி நிலத்தை அளவிடும் தள எண்.55 இன் வடக்குப் பகுதியில் மேற்குப் பக்கம், கிழக்கு: தள எண்.56, மேற்கு: குறிப்பிட்ட நிலத்தின் கீழே, அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 18 3/4 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 18 3/4 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 2 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 2 அடி, இதற்காக 37.5 சதுர அடி நிலம். மேலும் நீ.ய்.ஜலி .469 (பகுதி S.F.no.470/1,S.F.No.470/4A1 நிலங்கள் லேஅவுட்களாக மாற்றப்பட்டு "சுகுணா நகர்" லேஅவுட்கள் என்று பெயரிடப்பட்டுள்ளன, இதில் சைடு எண்.55 இன் வடக்குப் பகுதியில் மேற்குப் பகுதி 40 சதுர அடி நிலத்தை அளவிடுகிறது, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது:- நான்கு எல்லைகள்: வடக்கு: 600 சதுர அடி நிலம் அளவிடும் தள எண்.55 இன் தெற்குப் பகுதியில் கிழக்குப் பக்கம், தெற்கு: 560 சதுர அடி நிலம் அளவிடும் தள எண்.55 இன் வடக்குப் பகுதியில் கிழக்குப் பக்கம், கிழக்கு: மேற்கூறிய நிலத்தில், மேற்கு: 23 அடி அகலம் வடக்கு முதல் தெற்கு வரை லேஅவுட் சாலை. அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 20 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 20 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 2 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 2 அடி, இந்த 40 சதுர அடி நிலத்திற்கு. மேற்கூறிய வகை எண் I & II இன் மொத்த பரப்பளவில் (1140 சதுர அடி+77.5 சதுர அடி) 1217.5 சதுர அடி நிலம் பல்லடம் தாலுகாவின் கரைப்புதூர் கிராமத்தில் பல்லடம் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டம் மற்றும் அதற்கான அனைத்து இணைப்புகளிலும் அமைந்துள்ளது. அனைத்து எளிமைப்படுத்தல் உரிமைகள் மற்றும் பாதை அணுகலுடன். Eb.No.03-273-003-813. மேற்கூறிய இடம் இப்போது S.F.No .470/1A1,S.F.No.470/4A1A1. பட்டா எண்.513,2034 இல் இணைக்கப்பட்டுள்ளது.

**கிளை: கோயம்புத்தூர், கடன்தாரர்: திரு. சபரிநாதன். M, இணை கடன்தாரர்-1: திருமதி. பதிரீஸ்வரி. M, இணை கடன்தாரர்-2: திருமதி கலாவதி. V, அனைவரும் வசிப்பது எண். 4/235, மகலட்சுமிபுரம், மங்கலம் சாலை, பல்லடம், கிராமம், திருப்பூர், தமிழ்நாடு, இந்தியா-641664 . கடன் கணக்கு எண்: TN/TPR/TPUR/A000000091, NPA தேதி: 06.02.2025, கேட்பு அறிவிப்பு தேதி: 24.02.2025, நிலுவைத் தொகை ரூ. 27,42,517/- அன்றுள்ளபடி: 24.02.2025.**

**அசையா சொத்துக்களின் விபரங்கள்:** திருப்பூர் பதிவு மாவட்டத்தில், பல்லடம் துணை பதிவு மாவட்டத்தில், பல்லடம் தாலுகா, பல்லடம் பஞ்சாயத்து யூனியன், வடுகபாளையம்புதூர் கிராம பஞ்சாயத்து வாரியம், வடுகபாளையம் கிராமம், S.F.எண்.85/3, 3.14 ஏக்கர் பரப்பளவு கொண்டது. வடக்கு: பொன்னுசாமி மற்றும் பிறர் சொத்துக்கள், தெற்கு: சங்குதாலா மற்றும் பிறர் சொத்துக்கள், கிழக்கு: ரங்கன்னன் மற்றும் பிற சொத்துக்கள், மேற்கு: சங்குதாலா மற்றும் பிறர் சொத்துக்கள். பின்னர் இதில் P.Acre 2.00, வடக்கு: S.F.no.85/3 வையாபுரி சொத்து, தெற்கு: S.F.no.84, கிழக்கு: S.F.no.85/2, மேற்கு: S.F.no.85/4. குறிப்பிட்ட எல்லைகளுடன் கூடிய மற்றொரு ஏக்கர் 1.14 பரப்பளவு கொண்ட நில சொத்துக்கள் வீட்டு மனைகளின் தளவமைப்பாக உருவாக்கப்பட்டு "திருவள்ளுவர் நகர்" என்று பெயரிடப்பட்டு, நகர திட்டமிடல் அதிகாரிகளால் அவர்களின் நடவடிக்கை எண்.297/96 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த தளவமைப்பு தள எண்.245 இல் 2387 1/2 சதுர அடி பரப்பளவு கொண்ட குறிப்பிட்ட எல்லைகள் மற்றும் அளவீடுகளுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நான்கு எல்லைகள்: வடக்கு: தள எண்.226, தெற்கு: 23 அடி அகலம் கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு: தள எண்.244, கிழக்கு: 30 அடி அகலம் தெற்கு வடக்கு சாலை. அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 35 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 40 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 55 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 60 அடி, இந்த தளவமைப்பில் தெற்குப் பக்கம் 1200 சதுர அடி பரப்பளவு கொண்ட தளம் எண்.245, கட்டிடம் மற்றும் பின்வரும் எல்லைகளில் அமைந்துள்ளது. நான்கு எல்லைகள்: தெற்கு: தள எண்.245 இன் வடக்குப் பகுதி, வடக்கு: தள எண்.226, மேற்கு: 30 அடி அகலம் வடக்கு-தெற்கு சாலை, கிழக்கு: தள எண்.244. அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 40 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 40 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 30 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 30 அடி, 1200 சதுர அடி, மேற்கூறிய எல்லைகளுக்குள், மொத்தம் 1200 சதுர அடி அல்லது 111.482 சதுர மீட்டர் நிலம், கட்டிடம் மற்றும் மேலே உள்ள அனைத்து பொருத்துதல்களுடன், தளவமைப்பு பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட எளிமைப்படுத்தல் உரிமைகளுடன். 1039 1/2 சதுர அடி RCC கட்டிடம், தொட்டி, போர்வெல். மேற்கூறிய சொத்து, பட்டா எண்.2974 இன் படி, S.F.எண்.85/3A மற்றும் துணைப் பிரிவு S.F.எண்.85/14 இல் உள்ளது.

**கிளை: கோயம்புத்தூர், கடன்தாரர்: திருமதி. சங்கீதா. V, இணை கடன்தாரர்: திரு. ஆனந்தன். R, இருவரும் வசிப்பது எண். 1/41, A6 ருக்மா அவென்யூ, குரும்பபாளையம், சேவூர், கிராமப்புறம், அவினாசி, தமிழ்நாடு, இந்தியா-641655. கடன் கணக்கு எண்: TN/CBT/SULR/A000000156, NPA தேதி: 06.02.2025, கேட்பு அறிவிப்பு தேதி: 24.02.2025, நிலுவைத் தொகை ரூ. 23,36,853/- அன்றுள்ளபடி: 24.02.2025.**

**அசையா சொத்துக்களின் விபரங்கள்:** திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி துணைப் பதிவு அலுவலகம், அவினாசி தாலுகா, வேட்டுவபாளையம் கிராமம் புஞ்சை, S.F.no.433/1,434/1A,435/1B ,438/2A இல் 8.50 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் இந்த தளவமைப்பு எண்.14 இல் உள்ள 'ருக்குமா அவென்யூ' இல் 1063.03 சதுர அடி நிலம் கீழே உள்ள எல்லைகள் மற்றும் அளவீடுகளுக்குள் உள்ளது. இந்த விளக்கத்துடன் தொடர்புடையது. எல்லைகள் மற்றும் அளவீடுகள் இந்த விளக்கத்துடன் தொடர்புடையவை, அதற்கான எல்லைகள் மற்றும் அளவீடுகள்: தள எண்-14க்கான நான்கு எல்லைகள்: வடக்கு: தள எண்-16, தெற்கு: 40 அடி அகலம் கொண்ட கிழக்கு மேற்கு அமைப்பு சாலை, கிழக்கு: தள எண் 13, S.No.438/3A நிலம், மேற்கு: தள எண் – 15. அளவீடுகள்: வடகிழக்கில் இருந்து மேற்கு வரை 26.6 அடி, தென்கிழக்கில் இருந்து மேற்கு வரை 27 அடி, கிழக்கு-வடக்கில் இருந்து தெற்கு வரை 40 அடி, மேற்கு-வடக்கில் இருந்து தெற்கு வரை 40 அடி. மேற்கண்ட எல்லைகளுக்குள் நிலத்தின் மொத்த அளவு 1063.03 சதுர அடி. பட்டா எண்.2330, புதிய நில எண்.435/4A1A, கதவு எண்-1/41A6 இன் படி, இதில் மேலே உள்ள அனைத்து பொருத்துதல்களுடன் கூடிய RCC கட்டிடங்கள் மற்றும் பாதை உரிமைகள் மற்றும் எளிமை உரிமைகள் இணைக்கப்பட்டுள்ளன; அட்டவணை சொத்து வெட்டுவப்பாளையம் கிராமத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ளது.

**கிளை: கோயம்புத்தூர், கடன்தாரர்: திருமதி. மகேஸ்வரி. B, இணை கடன்தாரர்: திரு. பாலுமணி. T, இருவரும் வசிப்பது எண். 14, ஸ்ரீ கந்தன்னி, நல்லந்த் தோட்டம், குருநாதம்பாளையம், கிராமம், திருப்பூர், தமிழ்நாடு, இந்தியா-641665. கடன் கணக்கு எண்: TN/MTP/AVSH/A000000014, NPA தேதி: 06.02.2025, கேட்பு அறிவிப்பு தேதி: 24.02.2025, நிலுவைத் தொகை ரூ. 20,40,518/- அன்றுள்ளபடி: 24.02.2025.**

**அசையா சொத்துக்களின் விபரங்கள்:** திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிப்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், தெற்கு தாலுகா, உகாயனூர் பஞ்சாயத்து வாரிய எல்லையில், உகாயனூர் கிராமத்தில் S.F.no .255/1A,255/1B,255/2,257/1 மற்றும் 257/2 இல் P.Ac.10.61 நிலம் பின்வரும் எல்லைகளுக்குள் சதுர அடி பரப்பளவில் உருவாக்கப்பட்டது: நான்கு எல்லைகள்: கிழக்கு: தள எண்.15, மேற்கு: தள எண்.13, வடக்கு: தள எண்.30, அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 30 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 30 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 55 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 55 அடி, 1650 சதுர அடி. மேற்கூறிய எல்லைகளுக்குள், மேலே உள்ள அனைத்து பொருத்துதல்களும், பாதை உரிமைகள் மற்றும் தளர்வு உரிமைகளும் இணைக்கப்பட்டு, மொத்தம் 1650 சதுர அடி நிலம் உள்ளது. துணைப் பிரிவு S.F.no.257/1A1A1A1A இல் உள்ள பட்டா எண்.1726 இன் படி. மேற்கூறிய சொத்து உகயனூர் கிராமத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

மேற்கூறிய கடன்தாரர்கள் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHFL)-க்கு பணம் செலுத்தத் தவறினால், இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHFL சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்கண்ட கடனிட்டு சொத்துகளுக்கு எதிராக, செலவுகள் மற்றும் விளைவுகள் குறித்து முற்றிலும் கடன் வாங்கியவர்களின் பொறுப்பே ஆகும். கடன்தாரர்கள் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHFL)-ன் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி மேற்படி சட்டம் பிரிவு 13 (13)-ன் படி மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறுவழியில் மாற்றம் செய்தாலோ சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள். எந்தவொரு நபரும் அந்தச் சட்டத்தின் விதிகள் அல்லது அங்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கு முரணான ஊக்கமளிக்கும் நபர்கள், சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளபடி சிறைத் தண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படுவார்கள்.

**நாள்: 08.03.2025**
**இடம்: கோயம்புத்தூர்**

**திரு. K. ஸ்டாலின் காளியப்பன், அதிகாரபூர்வ அதிகாரி**
**இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

**தொடர்பு எண்கள்: RRM - தினேஷ் பாபு. S: 9500096714 & RLM - சரவணபவன். S: 9176664992, CRM - சரத்குமார். R: 9884140523 & CLM - ஸ்டாலின் காளியப்பன். K: 8870055513.**